இன்று கிராம சபைக் கூட்டம்

திண்டுக்கல்/தேனி, அக். 1: திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள 306 ஊராட்சிகளிலும் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, புதன் கிழமை (அக். 2) கிராம சபைக் கூட்டம் நடைபெறுகிறது.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இந்த கிராம சபைக் கூட்டத்தில் கிராம நிர்வாகம், பொது நிதி செலவினம், கிராம ஊராட்சியின் 01.04.2023 முதல் 31.03.2024 வரையிலான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் பெறுதல், தூய்மையான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்தல், மக்கள் திட்டமிடல் இயக்கம் உள்ளிட்ட பொருள்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது. எனவே, அந்தந்த ஊராட்சிக்குள்பட்ட பொதுமக்கள், கிராம சபைக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொண்டு விவாதங்களில் பெற்று, தங்களது கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்றார் அவர்.

தேனி: தேனி மாவட்டத்தில் உள்ள 130 கிராம ஊராட்சிகளிலும் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, புதன்கிழமை காலை 11 மணிக்கு கிராம சபைக் கூட்டம் நடைபெறுகிறது.

அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், ஊராட்சிக்கு உள்பட்ட பகுதிகளைச் சேர்ந்த வாக்குரிமை பெற்ற அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா தெரிவித்தார்.

நத்தத்தில் விசிக சார்பில் தெருமுனைப் பிரசாரக் கூட்டம்

நத்தம், அக். 1: திண்டுக்கல் மாவட்டம், நத்தத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் தெருமுனைப் பிரசாரக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நத்தத்தில் பேருந்து நிலைய ரவுண்டானா முன் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு கட்சியின் கிழக்கு மாவட்டச் செயலர் தமிழ்முகம் தலைமை வகித்தார். மண்டலச் செயலர் கலைவாணன், துணைச் செயலர் அன்பரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கள்ளக்குறிச்சியில் நடைபெறும் மது ஒழிப்பு மாநாடு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நாட்டு வெங்காய வெடிகள் விற்றவர் கைது

நத்தம், அக். 1: நத்தம் அருகேயுள்ள பரளிபுதூர் சுங்கச்சாவடி பகுதியில் உள்ள பெட்டிக்கடையில் நாட்டு வெங்காய வெடிகளை விற்றவரை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அனுமதியின்றி நாட்டு வெங்காய வெடிகள் தயாரிக்கப்படுவதாக நத்தம் போலீஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, பரளிபுதூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நத்தம் காவல் ஆய்வாளர் தங்கமுனியசாமி உள்ளிட்ட போலீஸார் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, பரளிபுதூர் சுங்கச்சாவடி பகுதியில் உள்ள பெட்டிக்கடையில் பரளிபுதூரைச் சேர்ந்த சின்னக்கருப்பன் (45) நாட்டு வெங்காய வெடிகளை விற்பனை செய்து வந்தது தெரியவந்தது. இதையடுத்து, அவரைக் கைது செய்த போலீஸார், அவரிடமிருந்து 5 நாட்டு வெங்காய வெடிகளைப் பறிமுதல் செய்தனர்.

கிணற்றில் தவறி விழுந்த முதியவர் உயிரிழப்பு

ஒட்டன்சத்திரம், அக். 1: திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருகே கிணற்றில் தவறி விழுந்த முதியவர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்தை அடுத்த மா.அம்மாபட்டி மேலப்பட்டியைச் சேர்ந்தவர் ஆரோக்கியம் (79). இவர் செவ்வாய்க்கிழமை அதிகாலை வீட்டின் அருகே உள்ள கிணற்றுத் தொட்டியில் முகத்தை கழுவுவதற்காகச் சென்றார். அப்போது, கால் தவறி கிணற்றில் விழுந்து தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இதுகுறித்து ரெட்டியார்சத்திரம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மறியலில் ஈடுபட்ட சிஐடியூ தொழிற்சங்கத்தினர் கைது

திண்டுக்கல், அக். 1: சாம்சங் தொழிலாளர்களுக்கு ஆதரவாக திண்டுக்கல்லில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட சிஐடியூ தொழிற்சங்கத்தினர் 114 பேரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

திண்டுக்கல் பேருந்து நிலையம் பகுதியில் நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்கு சிஐடியூ மாவட்டத் தலைவர் கே.ஆர். கணேசன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் கே. பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

போராட்டத்தின் போது, தொழில் சங்கம் தொடங்க உரிமை கோரி, போராடும் சாம்சங் நிறுவன தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும், தொழிற்சங்க உரிமை, ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் காவல் துறையின் நடவடிக்கையை தமிழக அரசு கட்டுப்படுத்த வலியுறுத்தியும், தொழிலாளர் விரோத நடவடிக்கையில் ஈடுபடும் சாம்சங் நிறுவனத்தைக் கண்டித்தும் முழக்கமிட்டனர். இதைத் தொடர்ந்து, சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட சிஐடியூ தொழிற்சங்கத்தினர் 114 பேரை போலீஸார் கைது செய்தனர்.

திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகே மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட சிஐடியூ தொழிற்சங்கத்தினர்.

வழிகாட்டிப் பயிற்சி முகாம்

திண்டுக்கல், அக். 1: திண்டுக்கல் ஸ்கூல் ஆப் டிஎன்பிஎஸ்சி கல்வி மையம் சார்பில், போட்டித் தேர்வுகளுக்கான விழிப்புணர்வு வழிகாட்டிப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இதுகுறித்து பயிற்சி மைய இயக்குநர் தியாகராஜன் தெரிவித்ததாவது:

திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகில் உள்ள இந்த மையத்தில் டிஎன்பிஎஸ்சி போட்டித் தேர்வுகள் குறித்து இலவச வழிகாட்டிப் பயிற்சி முகாம் கடந்த திங்கள்கிழமை முதல் நடத்தப்பட்டு வருகிறது. வருகிற 4-ஆம் தேதி வரை இந்தப் பயிற்சி முகாம் இலவசமாக நடத்தப்படும். டிஎன்பிஎஸ்சி தேர்வுக்கு தேவையான புத்தகங்களும் இந்த மையத்தில் கிடைக்கும். முகாமில் பங்கேற்க 9600524888 என்ற எண்ணில் முன்பதிவு செய்ய வேண்டும் என்றார் அவர்.

வரி செலுத்தத் தவறியவர்களுக்கு அமலுக்கு வந்தது ஒரு சதவீத தனி வட்டி!

திண்டுக்கல், அக். 1: நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செப்.30-க்குள் வரி செலுத்தத் தவறியவர்களுக்கு ஒரு சதவீத தனி வட்டி வசூலிக்கும் நடைமுறை அமலுக்கு வந்தது. இது பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டத்தின்படி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், தங்களது சொத்து வரியில் முதல் அரையாண்டுக்கான சொத்து வரியை ஏப்ரல் மாதத்துக்குள் செலுத்தினால், 5 சதவீத ஊக்கத்தொகை வழங்கப்படும் என தமிழக அரசு கடந்த ஆண்டு உத்தரவிட்டது.

நகர்ப்புற உள்ளாட்சிகளில் ஆண்டு வரி வசூல் இலக்கு சராசரியாக 65 முதல் 70 சதவீதம் வரை மட்டுமே எட்டப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதில், வரி வசூல் பணம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இதனால், பொதுமக்களிடமிருந்து 100 சதவீதம் வரி வசூல் செய்வதற்காகவே, 5 சதவீத ஊக்கத் தொகை அறிவிக்கப்பட்டது. அதேசமயத்தில், முதல் அரையாண்டில் செப்.30-க்குள் வரி செலுத்தத் தவறுவோருக்கு, காலதாமதமாகும் ஒவ்வொரு மாதத்துக்கும் தலா ஒரு சதவீத தனி வட்டி வசூலிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அமலுக்கு வந்த ஒரு சதவீத வட்டி வசூல்: ஊக்கத்தொகை வழங்குவதை விளம்பரப்படுத்திய உள்ளாட்சி அமைப்புகள், தனி வட்டி வசூலிக்கப்படும் என்ற அறிவிப்பு குறித்து மௌனம் காத்து வந்தன.

மேலும், கடந்த ஓராண்டாக குறிப்பிட்ட காலத்துக்குள் வரி செலுத்தியவர்களுக்கு 5 சதவீத ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது. ஆனால், காலதாமதமாக வரி செலுத்தியவர்களிடம் வட்டி வசூலிக்கப்படவில்லை. இந்த நிலையில், செப்.30-க்குள் வரி செலுத்தும் வாய்ப்பைத் தவறவிட்டு, அக்.1-ஆம் தேதி வரி செலுத்தியவர்களுக்கு ஒரு சதவீத தனி வட்டி வசூலிக்கும் நடைமுறை செவ்வாய்க்கிழமை அமலுக்கு வந்தது.

திண்டுக்கல் மாநகராட்சிக்கு வரி செலுத்த வந்த ஒருவர், ரூ.91 ஆயிரம் வழங்கினார். அதனுடன் ஒரு சதவீத வட்டியாக ரூ.910 செவ்வாய்க்கிழமை வசூலிக்கப்பட்டது. இதேபோல, வரி செலுத்த வந்த பொதுமக்கள் பலரும், வட்டி வசூலிக்கப்படுவதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

இதுதொடர்பாக திண்டுக்கல் மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறியதாவது:

கடந்த ஏப்ரல் மாதம் பொதுமக்களுக்கான வரி கேட்பு அறிவிப்பு வீடுகள் தோறும் மாநகராட்சி சார்பில் வழங்கப்பட்டது. இந்த அறிவிப்பின் பின் பகுதியில், வட்டி வசூலிக்கப்படும் என்ற விவரம் தெளிவாக குறிப்பிடப்பட்டது.

எனவே, வட்டி செலுத்துவதைத் தவிர்க்க குறிப்பிட்ட காலத்துக்குள் வரியை செலுத்த பொதுமக்கள் முன் வர வேண்டும் என்றார் அவர்.

வெடிக்காரன்வலசு கிராமத்தில் உயர்நீதிமன்ற நீதிபதி ஆய்வு

ஒட்டன்சத்திரம், அக். 1: திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருகேயுள்ள வெடிக்காரன்வலசு கிராமத்தில் சிட்கோ அமைக்க விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்த இடத்தை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் செவ்வாய்க்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஒட்டன்சத்திரம் சட்டப்பேரவைத் தொகுதி கொத்தையம் ஊராட்சிக்கு உள்பட்ட வெடிக்காரன்வலசு கிராமத்தில் தமிழக அரசு சார்பில் 70 ஏக்கர் தரிசு நிலத்தில் சிட்கோ அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால், சிட்கோ அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் குளம் உள்ள பகுதி என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், பாஜகவினர், அதிமுகவினர் உள்ளிட்டோர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்குத் தொடுத்தனர்.

இதையடுத்து, இந்த வழக்கு தொடர்பாக குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு நடத்திய ஆய்வில், சிட்கோ அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் அரளிக்குத்து குளம் என்று இந்தக் குழு அறிக்கை தாக்கல் செய்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், அரசுத் தரப்பில் இந்த இடம் தரிசு நிலம் என்று அரசு ஆவணங்களில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால், இந்த இடத்தை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் செவ்வாய்க்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அரசின் கூடுதல் வழக்குரைஞர் வீரகதிரவன், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ஒட்டன்சத்திரத்தை அடுத்த வெடிக்காரன்வலசு கிராமத்தில் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்த சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன். உடன் மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி உள்ளிட்டோர்.

10 கிலோ கஞ்சா பறிமுதல்: பெண் உள்பட 2 பேர் கைது

போடி, அக். 1: தேனி மாவட்டம், போடியில் திங்கள்கிழமை இரவு 10 கிலோ கஞ்சா வைத்திருந்த பெண் உள்பட இருவரை போலீஸார் கைது செய்தனர்.

குகேஷ்குமார்

ஜோதி

போடி நகர் காவல் நிலைய போலீஸார் போடி பகுதியில் போதைப் பொருள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, போடி சுப்புராஜ் நகர், சூரியா நகர் இடைப்பட்ட பகுதியில் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் தனியே நின்றிருப்பதைக் கண்டு அவர்களை விசாரித்தனர். அவர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பதிலளித்ததால் அவர்கள் வைத்திருந்த பையை சோதனையிட்டனர். அதில் 10 கிலோ கஞ்சா இருப்பது தெரிய வந்தது.

விசாரணையில் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை புதுப்பட்டியைச் சேர்ந்த மாணிக்கம் மகன் குகேஷ் குமார் (35), போடி கருப்பணன் தெருவில் வசிக்கும் காசி மனைவி ஜோதி (45) ஆகியோர் எனத் தெரியவந்தது.

இருவரும் ஆந்திரத்தைச் சேர்ந்த ஒருவரிடம் கஞ்சாவை வாங்கி வந்து விற்க முயன்றதும் தெரியவந்தது. இருவரையும் போலீஸார் கைது செய்து, கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

கைதான ஜோதி மீது போடி பகுதியில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. ரௌடி பட்டியலிலும் இவரது பெயர் உள்ளது குறிப்பிடத்தக்கது.

தெற்கு ரயில்வே

பொருட்கள் மேலாண்மை துறை

ஏலத் திட்டத்திற்கான திருத்தம் அக்டோபர் '24

அறிவிப்பு எண்: 10/2024

இரும்பு ஸ்கிராப், இரும்பு அல்லாத ஸ்கிராப், மற்ற இதர ஸ்கிராப், கண்டிக்கப்பட்ட வேகன், கோச்சுகள் & லோகோக்கள், ஸ்கிராப் ரெயில்கள் மற்றும் பிற நிரந்தர வழி ஸ்கிராப் பொருட்களை அகற்றுவதற்காக மின்-ஏலம் நடத்தப்படும்

இ-ஏலம் நடத்தியது	தற்போதுள்ள ஏல தேதி	மாற்றப்பட்டது	ஏலத்திற்கான பொருள்
CSSD/GOC	07/10/2024	08/10/2024	இ-ஏலத்தில் விற்கப்படும் பொருட்களின் விவரங்கள் www.ireps.gov.in இணையதளத்தில் கிடைக்கும்
MAS division	07/10/2024	08/10/2024	

குறிப்பு: அக்டோபர் '24-க்கு திட்டமிடப்பட்ட மற்ற அனைத்து ஏலங்களும் மாற்றப்படாமல் உள்ளன.

விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பட்டியலைப் பதிவிறக்கம் செய்ய, எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் http://www.ireps.gov.in ->E-Auction->Sale->Live Auctions.

முதன்மை தலைமைப் பொருள் மேலாளர்

பொது அறிவிப்பு

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, காந்திகிராமம், அம்பாத்துரை, A.நடுப்பட்டி, ஆசாரி தெரு, கதவு எண்.11/68-ல் இருக்கும் சின்னயா மகன் திரு. தங்கப்பாண்டி அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் கொடுக்கப்படும் பொது அறிவிப்பு யாதெனில், எமது கட்சிக்காரர் தான் கிரையம் பெற்ற கிரையப் பத்திரத்தின் அசல் மூலப்பத்திரமான 23.03.2006-ம் தேதி சின்னாளபட்டி சார்பதிவாளர் அலுவகத்தில் தமிழ்ச்செல்வி என்பவரால் சின்னம்மாள் என்பவருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட அசல் பத்திரம் (ஆவண எண்.487/2006) ஜூ ஜெராக்ஸ் எடுப்பதற்காக 02.09.2024ம் தேதி சின்னாளபட்டியில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு தனக்குப் பாத்தியப்பட்ட இருசக்கர வாகனத்தில் எடுத்துச் சென்ற போது அந்த கிரையப் பத்திரத்தின் அசல் ஆவணம் காணாமல் போய் விட்டது. வழி நெடுகிலும் ஆவணங்களை தேடிப்பார்த்ததில் கிடைக்கவில்லை. ஸை அசல் ஆவணத்தை எவரேனும் கண்டெடுக்கப்பெற்றால் எமது கட்சிக்காரருக்கோ அல்லது எனக்கோ தகவல் தெரிவிக்கும்படி இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அட்வகேட்

S.M.Loganathan B.A.B.L.,

Advocate

No. 83C, T.N.P.K Complex, (State Bank of India Back side) Thadicombu Road, Dindigul 624001. Cell: 99941 28822

பொது அறிவிப்பு

தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, தாமரைக்குளம் கிராமம், பாரதி நகரில் இருக்கும் லேட். K.ரெங்கன் அவர்கள் மகன் R.லெனின் என்பவர் கடந்த 24.09.2024 தேதி அன்று காலை சுமார் 10.30 மணியளவில் பெரியகுளம் மூன்றாந்தல் காந்திசிலை அருகே பெரியகுளம் 1 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகம் சர்வே எண்கள். 1856/1A, 1856 கட்டுப்பட்ட புஞ்சை நிலத்திற்குரிய ரிஜிஸ்டர்டு கிரைய பத்திரத்தை மேற்படி எனது கட்சிக்காரர் ஜெராக்ஸ் எடுக்கும் பொழுது மேற்படி பத்திரம் தொலைந்து விட்டது என்பதனை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் எவரேனும் மேற்படி பத்திரத்தை எடுத்திருப்பினும் பின்வரும் விலாசத்திற்கு தெரியப்படுத்தவும்.

S.MURUGAN, B.A.,B.L., ADVOCATE

D.NO.23, MPR Naidu complex IInd Floor, Near District Court, Lakshmipuram Post, Theni Dt. Cell: 99653 34027

SOUTH INDIAN Bank

Experience Next Generation Banking

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:

முதல் மாடி, YMCA பில்டிங், அல்போன்சா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref.: RO/SAR/SN/91/2024-25 தேதி: 01.10.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) திரு.S.இமாம் அஹமது ஹுஸைன், [M/s.சிராஜ் மில்க் ஏஜென்ஸி உரிமையாளர்], எண்.2/1, M.K.காம்ப்ளக்ஸ், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர், திண்டுக்கல்-624002, தமிழ்நாடு. மேலும் இருப்பிடம்: கதவு எண்.85, ஜின்னா நகர், மதுரை ரோடு, பேகம்பூர், திண்டுக்கல்-624002, தமிழ்நாடு.

2) திருமதி.I.கௌஸியா, எண்.85, ஜின்னா நகர், மதுரை ரோடு, பேகம்பூர், திண்டுக்கல்-624002, தமிழ்நாடு. மேலும் இருப்பிடம்: எண்.2/1, M.K.காம்ப்ளக்ஸ், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர், திண்டுக்கல்-624002, தமிழ்நாடு.

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., திண்டுக்கல் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்ளை சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 30.09.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், திண்டுக்கல் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.67,63,736.19-ஐ (ரூபாய் அறுபத்தேழு லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து எழுநூற்றி முப்பத்தாறு மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே, "என்ன உள்ளதோ அப்படியே" "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 28.10.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்	லட்டம் எண்.1: திருமதி. I. கௌஸியா லட்டம் எண்.2: திரு. S. இமாம் அஹமது ஹுஸைன்

சொத்து விபரம்: லட்டம் எண்.1:- திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, பிள்ளையார்நத்தம் கிராமம், S.No. 82/1, Re.S.No.82/1B3-ன்கீழ் அமைந்துள்ள 62 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற அனைத்து கட்டுமானங்கள், மேம்பாடுகள், வண்டிப்பாதை மற்றும் நடைபாதை உரிமைகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் பிற உபகரணங்கள் ஆகியவற்றுடன் சேர்த்து திருமதி. I. கௌஸியா என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவகத்தில் 22.08.2019 தேதியில் பதிவுபெற்ற தானசெட்டில்மெண்ட் பத்திர எண்.4175/2019-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: S.No. 82/1-ன்னுள்ள 259 சென்ட் இடத்தில் 58.5 சென்ட் அளவுள்ள சொத்து, கிழக்கே: S.No. 82/A-ன்னுள்ள சொத்து, தெற்கே: S.No. 83 & 83/3-ன்னுள்ள சொத்து, மேற்கே: வடக்கு-தெற்காக வண்டிப்பாதை.

லட்டம் எண்.2:- திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுகா, படியூர்கிராமம், சர்வே எண். 1277/10B-ன்ன 4800 சதுரடி [1200 சதுரடி+1200 சதுரடி+1200 சதுரடி+1200 சதுரடி] அளவில் பிளாட் எண்கள். 5, 6, 11 & 12 ஆகியவற்றின் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், நடைபாதை மற்றும் வண்டிப்பாதை உரிமை, தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் சேர்த்து திரு.S.இமாம் அஹமது ஹுஸைன் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, வடமதுரை சார்பதிவகத்தில் 24.12.2018 தேதியிட்ட விற்பனைப்பத்திரப் பதிவுஎண். 5095/2018-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: 1200 சதுரடி அளவுள்ள பிளாட் எண்.5-ன் எல்லைகள்: வடக்கே: பிளாட் எண்.12, கிழக்கே: பிளாட் எண்.6, தெற்கே: 20 அடி அகல கிழக்கு-மேற்கு பொது நடைபாதை, மேற்கே: சர்வே எண்.1277/9D-ன்னுள்ள சொத்து. 1200 சதுரடி அளவுள்ள பிளாட் எண்.6-ன் எல்லைகள்: வடக்கே: பிளாட் எண்.11, கிழக்கே: பிளாட் எண்.7, தெற்கே: 20 அடி அகல கிழக்கு-மேற்கு பொது நடைபாதை, மேற்கே: பிளாட் எண்.5. 1200 சதுரடி அளவுள்ள பிளாட் எண்.11-ன் எல்லைகள்: வடக்கே: 20 அடி அகல கிழக்கு-மேற்கு பொது நடைபாதை, கிழக்கே: பிளாட் எண்.10, தெற்கே: பிளாட் எண்.6, மேற்கே: பிளாட் எண்.12. 1200 சதுரடி அளவுள்ள பிளாட் எண்.12-ன் எல்லைகள்: வடக்கே: 20 அடி அகல கிழக்கு-மேற்கு பொது நடைபாதை, கிழக்கே: பிளாட் எண்.11, தெற்கே: பிளாட் எண்.5, மேற்கே: சர்வே எண். 1277/9D-ன்னுள்ள சொத்து.

நிர்ணயிக்கப்பட்ட தொகை	லட்டம் எண்.1: ரூ.36,16,200/- (ரூபாய் முப்பத்தாறு லட்சத்து பதினாறாயிரத்து இருநூறு மட்டும்) லட்டம் எண்.2: ரூ.16,80,000/- (ரூபாய் பதினாறு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD)	லட்டம் எண்.1: ரூ.3,61,620/- (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தொராயிரத்து அறுநூற்றி இருபது மட்டும்) லட்டம் எண்.2: ரூ.1,68,000/- (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்தெட்டாயிரம் மட்டும்)
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	28.10.2024 அன்று 02:00 PM முதல் 03:00 PM வரை (5 நிமிடம் தன்நீட்சியுடன் விற்பனை முடியும் வரை)
வங்கிக்கு தெரிந்த விலங்கங்கள்	லட்டம் எண்.1: 30.03.2022 முதல் 31.07.2024 வரை விலங்கங்கள் ஏதுமில்லை. லட்டம் எண்.2: 19.02.2019 முதல் 04.07.2024 வரை விலங்கங்கள் ஏதுமில்லை.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட் (Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.

சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சுமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியையோ (Ph. No. 0452 2300205/9894647220) அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட், திண்டுக்கல் கிளையின் மொபைல் எண். 8056531536-ல் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை **அங்கீகாரம் பெற்ற அலுவலர்**

கொடைக்கானலுக்கு தரமான அரசுப் பேருந்துகளை இயக்கக் கோரிக்கை

கொடைக்கானல் –வத்தலகுண்டு மலைச் சாலையில் நண்டாங்கரைப் பகுதியில் பழுதான பேருந்தை தள்ளிச் சென்ற பயணிகள்.

கொடைக்கானல், அக். 1: கொடைக்கானல் மலைச் சாலையில் செவ்வாய்க்கிழமை அரசுப் பேருந்து பழுதாகி நின்றதால், சுற்றுலாப் பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைப் பகுதிகளுக்கு சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திண்டுக்கல், கும்பகோணம், திருநெல்வேலி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து 20-க்கும் மேற்பட்ட அரசுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்தப் பேருந்துகளில் பல பேருந்துகளின் இருக்கைகள், இன்னல்கள், பேருந்தின் உள்ளே உள்ள தளப் பகுதி ஆகியவை சேதமடைந்து காணப்படுகிறது. மேலும், பராமரிப்பு சரியாக இல்லாத காரணத்தால், அரசுப் பேருந்துகள் தினமும் பண்ணைக்காடு, தாண்டிக்குடி, மச்சூர், வாழைகிரி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பழுதாகி நின்று விடுகிறது.

இந்த நிலையில், வத்தலகுண்டிலிருந்து செவ்வாய்க்கிழமை கொடைக்கானலுக்கு வந்த அரசுப் பேருந்து நண்டாங்கரையருகே வந்தபோது, பழுதாகி நின்றது. இதையடுத்து, இந்தப் பேருந்தில் பயணம் செய்த சுற்றுலாப் பயணிகள் சிறிது தொலைவுக்கு பேருந்தை தள்ளிச் சென்று மற்ற வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் நிறுத்த உதவினர்.

இதுகுறித்து அரசுப் பேருந்து ஓட்டுநர் ஒருவர் கூறியதாவது:

தமிழக அரசு போக்குவரத்துறை சார்பில் கொடைக்கானலுக்கு புதிய பேருந்துகள் வழங்கப்பட்டது. இந்தப் பேருந்தில் 6 கியர்கள் உள்ளன. மேலும் பேருந்து தாழ்வாக உள்ளதால், கொடைக்கானல் மலைச் சாலையில் மேடு, பள்ளங்கள் அதிகளவில் உள்ளதால், இந்தப் பேருந்துகள் தரையில் உரசி சேதமடைகின்றன. இது போன்ற பல்வேறு பிரச்னைகள் இந்த புதிய பேருந்துகளில் உள்ளன. இதுகுறித்து போக்குவரத்து கிளை மேலாளரிடம் தெரிவித்துள்ளோம்.

எனவே, இனிவரும் காலங்களில் கொடைக்கானல் மலைப் பகுதிகளுக்கு தரமான அரசுப் பேருந்துகளை வழங்க போக்குவரத் துறை அதிகார